## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் நலம் – கல்வி உதவித் தொகை – கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அரசு இசைப்பள்ளிகளில் தேவாரம், தவில், நாதஸ்வரம் போன்ற பாடங்களை பயிலும் பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை – வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர் , மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (சிந 2) த் துறை

அரசு ஆணை(நிலை) எண். 70

நாள். 15.7.05.

திருவள்ளுவர் ஆண்டு 2036
பார்த்திப, ஆனி 31.

படிக்கப்பட்டது:

1. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை இயக்குநரின் கடித எண்.டி1/59/2001, நாள்.22.1.2001, 21.3.03, 16 10.03, 7.4.2004 மற்றும் 25.10.2004.

* * * * *

ஆணை:

தமிழ் நாட்டில் கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அரசு இசைக் கல்லூரிகளில் தேவாரம், தவில், நாதஸ்வரம் போன்ற இசைப்பாடத்தைப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் இன மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதற்கு அரசு அங்கீகாரம் அளிக்கவில்லை என்று பார்வையில் படிக்கப்பட்டுள்ள கடிதங்களில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும், தேவாரம், தவில், மற்றும் நாதஸ்வரம் போன்ற இசைப் பாடங்களை, தமிழ் நாட்டில் கலைப் பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் 624 மாணவர்கள் பயிலுகின்றனர். நாதஸ்வரம், தவில் பயிற்சி முடித்த மாணவர்களுக்கு திருமண விழா, கோவில் திருவிழா மற்றும் பொது நிகழ்ச்சிகளில் கலந்துக் கொண்டு இசை நிகழ்ச்சி வழங்க சுய வேலை வாய்ப்பு உள்ளது. தேவாரம் பயின்ற மாணவர்களுக்கு கோயில் திருவிழா வழிபாட்டின் போது தேவாரப் பாடல்கள் இசைக்கவும், தேவார நிகழ்ச்சி நடத்தவும் வாய்ப்புள்ளது. இப்பாட முறைகளுக்கு மாணவர்களிடமிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ.152/- கட்டண விகிதம் பெறப்படுவதாக கலை பண்பாட்டு ஆணையர் குறிப்பிட்டுள்ளார்.

2. புதிய பாடமுறைகளுக்கு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் கல்வி உதவித்தொகை வழங்குவதற்கு அப்பாட முறையினை அங்கீகரித்து கட்டண விகிதங்களை நிர்ணயம் செய்ய பரிசீலிக்கும் பொழுது புதிய பாட முறையினை ஒத்துள்ள அதே சமயத்தில் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டு உதவித்தொகை வழங்கப்பட்டு வரும் பழைய பாடமுறைகளின் கட்டண விகிதங்களே புதிய பாடமுறைகளுக்கு அனுமதிக்கப்படுகிறது என்றும், கல்வி உதவித்தொகை அறிவிக்கையின்படி வித்வான் படிப்பிற்காக (2 வருட பட்டப்படிப்பு) கல்வி உதவித்தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது என்று பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் குறிப்பிட்டுள்ளார்:-

| | |
|---|---|
| படிப்புக் கட்டணம் | ரூ.37.50 |
| புத்தகக் கட்டணம் | ரூ.25.00 |
| மாணவர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் | ரூ.62.50 வீதம் |

எனவே கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு இசைக் கல்லூரிகளில் தேவாரம், தவில், நாதஸ்வரம் போன்ற இசைப்பாடங்களைப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு மேற்குறிப்பிட்டுள்ள அளவில் உதவித் தொகை வழங்கலாம் என்று பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார். இச் செலவினத்தை ஆண்டுதோறும் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்திற்காக (Post-Matric Scholarship) ஒதுக்கப்படும் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் என்றும், இதற்காகத் தனியாக நிதி ஒதுக்கீடு தேவையில்லை என்றும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்

3. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநரின் செயற்குறிப்பு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு இசைப் பள்ளிகளில் தேவாரம், தவில், நாதஸ்வரம் போன்ற இசைப் பாடங்களைப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் இன மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை மாணவர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.63 வீதம் (ரூபாய் அறுபத்தி மூன்று மட்டும்) பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் திட்டத்தின் கீழ் (Post Matric Scholarship) இவ்வாணையின் இணைப்பில் உள்ளபடி வழங்குவதற்கு அரசு ஆணையிடுகிறது.

4. பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் பின்வரும் சம்பந்தப்பட்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:-

(i) 2225 - ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்– 277 – கல்வி – II மாநிலத் திட்டம் – JF – மெட்ரிக்குலேஷனுக்கு மேற்பட்ட வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்குப் படிப்பு உதவித்

தொகை – 12 – படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும் – 09 – ஏனையவை.
(2225 – 03 – 277 – JF – 1294)

(ii) 2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி II மாநிலத் திட்டம் KF மெட்ரிகுலேஷனுக்கு மேற்பட்ட வகுப்புகளில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் படிப்புதவித் தொகை 12– படிப்புதவித் தொகைகளும் பயிற்சித் தொகைகளும் –09 – ஏனையவை (த.தொ.கு.எண்.2225 03 277 KF 1293)

(iii) 2225 ஆதி திராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–277. கல்வி II மாநிலத் திட்டம் SB மெட்ரிகுலேஷனுக்கு பிந்தைய வகுப்புகளில் பயிலும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கட்டுப்பாட்டிக் கீழ் உள்ளவை – 12. படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் 09– ஏனையவை (த.தொ.கு.எண்.2225–03–277–SB–1293)

5. இவ்வுதவித் தொகைக்கு பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் ...கை (Post Matric Scholarship) அறிவிக்கையில் உரிய திருத்தங்கள் வெளியிடும்படி ...த்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண். ...DSVNP-05. நாள் . 17.0505 –ன்படி இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அ. நாகராஜன்,
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலர்.

...ர்:

...த்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர்,
...னை –5.